Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 188 | உள்ளூர் - 07.07.2026 | செவ்வாய் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 188 | வெளியூர் - 08.07.2026 | புதன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

SBI-யில் 49 சட்ட அதிகாரி பணியிடங்கள்!

ஹார்முஸ் நீரிணையில் மீண்டும் பதற்றம்...!

வெள்ளத்தில் தத்தளிக்கும் மும்பை!

மின் பணியாளர்களுக்கு பணியிட மாற்ற கலந்தாய்வு!



எக்ஸ் தளத்தில் பிரதமர் மோடி வாழ்த்தியதை ஸ்கிரி –ஷாட் எடுத்து ட்ரூத் சோசியல் பக்கத்தில் பகிர்ந்தார் டிரம்ப்!

## பிரதமர் மோடிக்கு இந்தோனேசியாவின் உயரிய விருது!

இந்தோனேசியா, ஜூலை. 07–

மூன்று நாடுகள் சுற்றுப்பயணத்தின் முதல் கட்டமாக பிரதமர் மோடி இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தா சென்றடைந்தார்.



பிரதமர் மோடி பயணித்த சிறப்பு விமானம் இந்தோனேசிய வான்வெளியில் நுழைந்த உடனேயே, அந்த நாட்டின் விமானப்படையைச் சேர்ந்த அதிநவீன போர் விமானங்கள் பாதுகாப்பு அரணாகப் பறந்து விமான நிலையம் வரை அழைத்து வந்தன. இந்தோனேசிய அதிபர் பிரபோவோ சுபியாண்டோ நேரடியாக விமான நிலையத்திற்கே வந்து உற்சாக வரவேற்பு அளித்ததார்.

இந்தோனேசிய அரசின் Protocol–படி வெளிநாட்டு தலைவர்களை வரவேற்க அதிபர் வரவேண்டியதில்லை. ஆனால் பிரதமர் மோடிக்காக மரபை மீதி அதிபரே நேரில் வந்து வரவேற்றது கவனம் பெற்றது. வர்த்தகம், ராணுவப் பாது காப்பு, கடல்சார் பாது காப்பு, தொழில் முதலீடுகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இரு நாடுகளின் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து அந்நாட்டு அதிபருடன் அவர் விவாதிக்க உள்ளார்.

மேலும், இந்தோனேசியாவில் வாழும் இந்திய வம்சாவளியினரை நேரில் சந்தித்துப் பிரதமர் உரையாடவுள்ளார்.

இந்த ஆண்டு இந்தியாவின் குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராக அதிபர் பிரபோவோ பங்கேற்றதன் தொடர்ச்சியாகவே இந்தச் சந்திப்பு அமைந்துள்ளது என முன்னதாக பிரதமர் மோடி தனது எக்ஸ் பக்கத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இந்தோனேசியாவின் உயரிய விருதான 'பிந்தாங் அடிபூர்ணா ஆஃப் திரிபப்ளிக் ஆஃப் இந்தோனேசியா' பதக்கத்தை அவருக்கு வழங்குவதாக அதிபர் பிரபோவோ சுபியாண்டோ இன்று அறிவித்துள்ளார்.

இந்த விருந்தானது இந்தோனேசியாவின் ஒற்றுமை, தொடர்ச்சி மற்றும் செழிப்புக்கு பங்காற்றிய தனி நபர்களுக்கு வழங்கப்படும் ஒன்றாகும். இந்தோனேசியப் பயணத்தை முடித்து பின்னர், பிரதமர் மோடி அங்கிருந்து நேரடியாக ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

### விஜய்க்கு உச்சநீதிமன்றம் பச்சைக்கொடி!

# கரூர் பயணத்துக்கு தடை இல்லை

# திமுக மனு தள்ளுபடி?

### தொடரும் சிபிஐ விசாரணை/ நிவாரண உதவிகள்!!

சென்னை, ஜூலை. 07–

கரூர் கூட்ட நெரிசல் வழக்கில் சிபிஐ விசாரணை நடைபெற்று வரும் நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் சி. ஜோசப் விஜய், அமைச்சர் ஆதவ் அர்ஜுனா மற்றும் வழக்கில் தொடர்புடையவர்கள் பொதுமக்கள் முன்னிலையில் கருத்து தெரிவிக்கவோ, பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சந்திக்கவோ தடை விதிக்க வேண்டும் என்று திமுக அமைப்புச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான ஆர்.எஸ். பாரதி தாக்கல் செய்த இடைக்கால மனுவை உச்சநீதிமன்றம் செவ்வாய்க்கிழமை நிராகரித்தது. மூத்த வழக்கறிஞர் ஹுசைஃபா அகமதி ஆஜராகி, ஜூலை 10–ஆம் தேதி கரூருக்கு செல்லவுள்ள முதலமைச்சர் விஜய், உயிரிழந்தோர் குடும்பத்தினரைச் சந்தித்து அரசு நிவாரண உதவிகள் வழங்க





திட்டமிட்டிருப்பதால், சிபிஐ விசாரணையில் முக்கிய சாட்சிகளாக உள்ளவர்களுக்கு தாக்கம் ஏற்படக்கூடும் என்று வாதிட்டார். மேலும், வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட சிலர் தற்போது அமைச்சர்களாக இருப்பதால், அவர்கள் வெளியிடும் கருத்துகள் விசாரணையின் நம்பகத்தன்மையை பாதிக்கக்கூடும் என்றும் தெரிவித்தார்.

இந்த மனுவை பரிசீலித்த நீதிமன்றம், இத்தகைய சூழலில் வழங்கக்கூடிய பயனுள்ள இடைக்கால உத்தரவு என்ன என்பது தெளிவாக இல்லை என்று கருத்து தெரிவித்தது. இறுதியில், திமுக தரப்பின் கோரிக்கையை ஏற்க மறுத்த நீதிமன்றம், விஜயின் கரூர் பயணத்துக்கு தடை விதிக்கவில்லை. விசாரணையின் போது, "உச்சநீதிமன்றத்தை அரசியல் களமாக மாற்ற முயற்சிக்கிறீர்களா?", "முதல்வரின் பேச்சை நீதிமன்றம் கட்டுப்படுத்த வேண்டுமா?" என நீதிபதிகள் விஸ்வநாதன், ஆலோக் ஆராதே ஆகியோர் திமுக தரப்பு வழக்கறிஞரிடம் அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினர்.

இதையடுத்து, மனுவை முழு சுதந்திரத்துடன் வாபஸ் பெறுவதாக திமுக தரப்பு தெரிவித்தது. அதனைத் தொடர்ந்து உச்சநீதிமன்றம் மனுவை தள்ளுபடி செய்தது.

2025 செப்டம்பர் 27–ஆம் தேதி தமிழக வெற்றிக் கழக பொதுக்கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்தனர்; 140–க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதையடுத்து உச்சநீதிமன்றம் சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்டு, முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையில் கண்காணிப்புக் குழுவை அமைத்திருந்தது. இந்த வழக்கில் சாட்சிகளை பாதிக்கும் வகையில் யாரும் செயல்படக் கூடாது என்பதே திமுக தரப்பின் முக்கிய வாதமாக இருந்தது.



தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்வில், 1000 கோடி ரூபாய் முதலீடு செய்திடும் வகையில் சென்னை போரூரில் உள்ள ஹிட்டாச்சி குழுமத்தைச் சேர்ந்த உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தின் விரிவாக்கத் திட்டத்திற்கும், செங்கல்பட்டில் உள்ள ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா நிறுவனத்தின் உற்பத்தித் திட்டத்தின் விரிவாக்கத்திற்குமான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் தொழில் துறை அமைச்சர் செல்வி எஸ். கீர்த்தனா, தலைமைச் செயலாளர் மு. சாய்குமார், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச. விஜயகுமார், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தீபக் ஜேக்கப், ஹிட்டாச்சி இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வேணு நுகரி, ஹிட்டாச்சி இந்தியா நிறுவனத்தின் தலைமை வளர்ச்சி அலுவலர் கார்த்திக் கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## "மறுபரிசீலனை செய்ய வேண்டும்": மோடிக்கு முதல்வர் விஜய் கடிதம்!

சென்னை, ஜூலை. 07–

அந்த்யோதயா அன்னயோஜனா (AAY) திட்டத்தில் குடும்ப உறுப்பினர்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் உணவு தானியம் வழங்கும் புதிய சட்டத் திருத்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடிக்கு முதலமைச்சர் விஜய் கடிதம் எழுதியுள்ளார்.



தற்போது AAY குடும்பங்களுக்கு மாதம் 35 கிலோ உணவு தானியம் வழங்கப்படுகிறது. புதிய திருத்தம் அமலுக்கு வந்தால், குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு 7 கிலோ என்ற அடிப்படையில் வழங்கப்படுவதால், தமிழகத்தில் உள்ள 18.64 லட்சம் AAY குடும்பங்கள் மற்றும் 69.26 லட்சம் பயனாளிகள் பாதிக்கப்படுவார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால், தமிழகத்துக்கான மாதாந்திர உணவு தானிய ஒதுக்கீடு 65,261 டன்னில் இருந்து 42,040 டன்னாக குறையும் என்றும், இது ஏழை மக்களின் உணவுப் பாதுகாப்பை பாதிக்கும் என்றும் எச்சரித்துள்ளார்.

தற்போதுள்ள 35 கிலோ உணவு தானிய வழங்கும் முறையை தொடர வேண்டும் என பிரதமரிடம் முதலமைச்சர் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

## ஹார்முஸ் நீரிணையில் மீண்டும் பதற்றம்...!

வாஷிங்டன், ஜூலை. 07–

உலகின் முக்கிய எண்ணெய் வர்த்தக வழித்தடமான ஹார்முஸ் நீரிணையில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. ஓமன் கடற்கரைக்கு அருகே தெற்கு வழித்தடத்தில் பயணித்த வணிக டேங்கர் கப்பல் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டதில் கப்பலில் தீப்பற்றியதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த தாக்குதலுக்கு ஈரானின் புரட்சிகர காவல்படை (IRGC) காரணம் என அமெரிக்க அதிகாரிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.



இந்த தாக்குதலுக்கு முன்பு, ஈரான் அனுமதிக்காத கப்பல் வழித்தடங்களை பயன்படுத்துவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்திருந்தது. தாக்குதலில் குறைந்தது இரண்டு ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. உயிரிழப்பு எதுவும் பதிவாகவில்லை என்றாலும், ஹார்முஸ் நீரிணையில் கப்பல் போக்குவரத்து பாதுகாப்பு மீதான கவலை மீண்டும் அதிகரித்துள்ளது. உலகின் மொத்த கச்சா எண்ணெய் வர்த்தகத்தில் சுமார் ஐந்தில் ஒரு பங்கு ஹார்முஸ் நீரிணை வழியாக நடைபெறுவதால், இந்த சம்பவம் சர்வதேச எண்ணெய் சந்தையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். மேலும், ஈரான் அமெரிக்கா இடையிலான பேச்சுவார்த்தைகளும் புதிய சிக்கலை சந்திக்கக்கூடும் என்ற அச்சம் எழுந்துள்ளது.




தமிழ்நாடு அரசின் சார்பில், திவான் பகதூர் –திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் பிறந்த நாளையொட்டி சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள திவான் பகதூர் – திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் ப. வெங்கடரமணன், சமூகநீதித் துறை அமைச்சர் வன்னி அரசு, நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் நெ. மரிய வில்சன், செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் ரா. குமார், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், சட்டமன்ற உறுப்பினர் எம்.அருள் பிரகாசம் ஆகியோர் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை/தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் வளர்ச்சி மற்றும் தித் துறைச் செயலாளர்(பொ) வ.தட்சிணாமூர்த்தி, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.அ.அருண் தம்புராஜ், இரட்டைமலை சீனிவாசன் குடும்பத்தினர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தலையங்கம்
மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 07.07.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 23-ம் தேதி




இன்றைய உலகில் இணையம் மனிதர்களின் அன்றாட வாழ்க்கையின் பிரிக்க முடியாத அங்கமாக மாறியுள்ளது. ஒரே ஒரு நாள் இணையம் முழுமையாக செயலிழந்தால், தகவல் தொடர்பு முதல் வங்கி சேவைகள் வரை பல துறைகள் கடுமையாக பாதிக்கப்படும்.

காலை எழுந்தவுடன் மொபைலில் இணையம் இல்லையெனில் முதலில் அது சாதாரண கோளாறு என்று நினைப்போம். ஆனால் உலகம் முழுவதும் இணைய சேவை முடங்கியிருப்பது தெரியவந்தால், அலுவலகப் பணிகள், ஆன்லைன் வகுப்புகள், மின்னஞ்சல், வீடியோ கூட்டங்கள், கிளவுட் சேவைகள் அனைத்தும் நிறுத்தப்படும்.

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகள், UPI சேவைகள், இணைய வங்கி, ஆன்லைன் ஷாப்பிங், ரயில் மற்றும் விமான டிக்கெட் பதிவு, ஹோட்டல் முன்பதிவு போன்ற சேவைகளும் செயலிழக்கும். இதனால் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படும்.

ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் தகவல் தொடர்பியல் நிபுணர் ஜெஃப் ஹான்காக் கூறுவதுபோல், இணையம் மனித வாழ்க்கையில் இவ்வளவு ஆழமாக இணைந்திருப்பதால், சில மணி நேரம் கூட இணையம் இல்லாமல் இருப்பது பலருக்கு சிரமமாகிவிட்டது.

உலகளாவிய இணையத்தை ஒரே நேரத்தில் முழுமையாக நிறுத்துவது மிகவும் கடினம் என்றாலும், சைபர் தாக்குதல்கள், முக்கிய சர்வர்களில் ஏற்படும் கோளாறுகள், கடலுக்கடியில் செல்லும் ஃபைபர் ஆப்டிக் கேபிள்கள் சேதமடைவது, அரசுகளின் இணையக் கட்டுப்பாடுகள் அல்லது சக்திவாய்ந்த சூரியப் புயல்கள் போன்றவை பெரிய அளவிலான இணைய பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

ஒரு நாள் இணையம் இல்லாமல் போவது தகவல் தொடர்பு, கல்வி, வணிகம், மருத்துவம், அரசு சேவைகள், பொருளாதாரம் உள்ளிட்ட பல துறைகளில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். அதே நேரத்தில், இணையத்தின் முக்கியத்துவத்தையும், அதன்மீதான மனிதர்களின் அதிகரித்த சார்பையும் உணர்த்தும் அனுபவமாக அது அமையும்.

# நேட்டோ உச்சி மாநாடு: துருக்கி செல்கிறார் டிரம்ப்!



வாஷிங்டன், ஜூலை. 07–

2026ஆம் ஆண்டிற்கான நேட்டோ (NATO) உச்சி மாநாடு துருக்கியின் அங்காரா நகரில் இன்றும் நாளையும் நடைபெறுகிறது. இது இங்கு நடக்கும் இரண்டாவது முறை மாநாடாகும். அங்காராவில் உள்ள அதிபர் மாளிகை வளாகத்தில் நேட்டோ பொதுச்செயலாளர் மார்க் ருட்டே தலைமையில் இந்த மாநாடு நடைபெறுகிறது.

இந்த உச்சி மாநாட்டில் நேட்டாவின் 32 உறுப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர். அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான், ஜெர்மனி அதிபர் பிரெட்ரிக் மெர்ஸ் ஆகிய முக்கிய தலைவர்களும் இதில் பங்கேற்கின்றனர்.

நேட்டா அம்மைப்பை கடுமையாக விமர்ச்சித்த டிரம்ப் தற்போது அந்த மாநாட்டில் பங்குபெறுகிறார். இந்த மாநாட்டில் நடைபெறும் கலந்துரையாடலில் ராணுவத்திற்கான செலவீனங்கள், ஈரான்– உக்ரைன் போர், உலகளாவிய போர், ஈரான் விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகளின் நிலைப்பாடு குறித்து ஆலோசிக்கப்படவுள்ளது.

**அதிபர்களுடனான சந்திப்பு:**

துருக்கி சென்ற டிரம்ப் அங்குள்ள அதிபர் ரெசெப் தயிப் எர்டோகனுடன் இருதரப்பு பாதுகாப்புத் துறை ஒத்துழைப்பு குறித்து நேரடியாக ஆலோசனை நடத்துவார்.

இதனைத்தொடர்ந்து டிரம்ப் நாளை உக்ரைன் அதிபர் வொலோடிமிர் ஜெலென்ஸ்கியுடன் உக்ரைன் பாதுகாப்பு மற்றும் அமைதி உடன்படிக்கைக்கான வழிகள் குறித்து விவாதிக்கப்படும்.

அத்துடன் சிரியா அதிபர் அகமது உசேன் அல்–ஷாராவுடன் அமெரிக்கா அதிபர் டிரம்ப் இருநாடுகளுக்கிடையேயான இருதரப்பு பேச்சுவார்த்தையை நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

**கலந்துரையாடல்:**

நேட்டோ அமைப்பைப் பாதுகாப்பதற்காக அமெரிக்கா மற்ற நாடுகளை விட மிக அதிக அளவில் நிதிச் செலவு செய்வதாக டிரம்ப் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறார். இந்நிலையில் டிரம்ப்பின் வலியுறுத்தலின் பேரில் கடந்த ஆண்டு நடைபெற்ற தி ஹேக் மாநாட்டில், உறுப்பு நாடுகள் தங்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5%–ஐ 2035–ஆம் ஆண்டிற்குள் இராணுவப் பாதுகாப்பிற்குச் செலவிட ஒப்புக்கொண்டன.

இந்த 5% இலக்கை எட்டாத நாடுகள் மீது அமெரிக்க ஆயுதங்களுக்கான அனுமதி மறுப்பு, இராணுவக் குறைப்பு போன்ற கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

தற்போது நடக்கும் இந்த மாநாட்டில் இது தொடர்பான வாக்குறுதிகளை நடைமுறை படுத்தவும் அதனை உடனடியாக செயல்படுத்தவும் டிரம்ப் அழுத்தம் கொடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ரஷ்யா–உக்ரைன் போரை முடிவுக்கு வருமா?**

ரஷ்யா–உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வர, உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கியுடன் டிரம்ப் பேச்சுவார்த்தை நடத்துகிறார். இதில் உக்ரைனுக்கான பாதுகாப்புச் செலவுகளையும் ஐரோப்பிய நாடுகளே அதிகம் ஏற்க வேண்டும் என அமெரிக்கா எதிர்பார்க்கிறது.

இறுதியாக செய்தியாளர் சந்திப்பு நடைபெறும். அத்துடன் இந்த உச்சி மாநாடு நிறைவு பெறவுள்ளது.

# மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்டங்கள்- முதலமைச்சர் விஜய் அதிகாரிகளுடன் ஆலோசனை!




சென்னை, ஜூலை. 07–

தமிழக சட்டசபையில் விரைவில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ளதை முன்னிட்டு, முதலமைச்சர் விஜய் நாள்தோறும் அரசுத் துறைகளின் உயர் அதிகாரிகளுடன் தொடர் ஆலோசனைகளை மேற்கொண்டு வருகிறார். அந்த வகையில், இன்று தலைமைச் செயலகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளுடன் முதலமைச்சர் விஜய் தீவிர ஆலோசனை நடத்தினார்.

**முக்கிய திட்டங்கள் மற்றும் கோரிக்கைகள்**

இன்றைய கூட்டத்தில் முதலாவதாக மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்துறை அதிகாரிகளை அழைத்து முதலமைச்சர் விஜய் ஆலோசனை நடத்தினார். இக்கூட்டத்தில் பின்வரும் முக்கிய திட்டங்கள் மற்றும் கோரிக்கைகள்குறித்துவிரிவாகவிவாதிக்கப்பட்டது.

மாற்று திறனாளிகளுக்கு தேவையான உபகரணங்களை விரைந்து வழங்குவது, ஆட்டிசம் பாதிப்பு அடைந்த சிறப்பு குழந்தைகளுக்கு செயல்படுத்த வேண்டிய திட்டங்கள், குறைதீர்ப்பு முகாம்களில் மாற்றுத்திறனாளிகள் அளிக்கும் கோரிக்கை மனுக்களுக்கு விரைந்து நடவடிக்கை எடுப்பது, மாற்றத்திறனாளிகளுக்கான உதவி தொகை உயர்வு, சிறப்பு குழந்தைகளுக்கு பிரத்யேக பள்ளிகள் திறப்பது உள்ளிட்ட பல்வேறு சிறப்பு திட்டங்கள் குறித்து இன்றைய கூட்டத்தில் ஆலோசனை நடத்தப்பட்டது.

**தொழிலாளர் நலத்துறை**

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை கூட்டத்தைத் தொடர்ந்து, தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளை அழைத்து முதலமைச்சர் விஜய் ஆலோசனை மேற்கொண்டார். இதில் தொழிலாளர்களின் நலன் காக்கும் திட்டங்கள், புதிய வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் பட்ஜெட்டில் தொழிலாளர் துறைக்காக ஒதுக்கப்பட வேண்டிய நிதி நிலை குறித்து ஆலோசிக்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# அயோத்தி ராமர் கோயில் நன்கொடை திருட்டு விவகாரம்: அறக்கட்டளை நிர்வாகிகள் ராஜினாமா ஏற்பு!




அயோத்தி, ஜூலை. 07–

அயோத்தி ராமர் கோயில் நன்கொடை திருட்டு விவகாரம் தொடர்பாக ராமஜென்ம பூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளையின் பொதுச்செயலாளர் சம்பத் ராய், அறங்காவலர் அனில் மிஸ்ரா அண்மையில் ராஜினாமா செய்தனர். அயோத்தியில் நேற்று நடைபெற்ற அறக்கட்டளை கூட்டத்தில் இருவரது ராஜினாமா கடிதங்களும் ஏற்கப்பட்டன.

# இந்தியாவின் 'சிக்கன்ஸ் நெக்' பகுதிக்கு அருகே சீனா!



திண்டுக்கல், ஜூலை. 07–

இந்தியாவின் எல்லையோரப் பாதுகாப்புக்கு மிக முக்கியமான சிலிகுரி காரிடார் எனப்படும் 'சிக்கன்ஸ் நெக்' பகுதிக்கு மிக அருகில், வங்காளதேசத்தின் 'தீஸ்தா நதி மேலாண்மை திட்டத்தை' அதிவேகமாகச் செயல்படுத்த சீனாவும் வங்காளதேசமும் அதிகாரப்பூர்வமாக ஒப்பந்தம் செய்துள்ளன. வங்காளதேசத்தின் புதிய பிரதமர் தாரிக் ரஹ்மான் அண்மையில் சீனாவுக்கு மேற்கொண்ட அரசுமுறைப் பயணத்தின்போது இதற்கான சாத்தியக்கூறு ஆய்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இது இந்திய பாதுகாப்பு வட்டாரங்களில் பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

**தீஸ்தா நதி மேம்பாட்டுத் திட்டம்?**

வங்காளதேசத்தின் வடக்குப் பகுதியில் பாயும் தீஸ்தா நதியின் சுற்றுச்சூழல் மற்றும் வெள்ள மேலாண்மையை மேம்படுத்த சுமார் 1 பில்லியன் டாலர் மதிப்பில் 'தீஸ்தா நதி விரிவான மேலாண்மை மற்றும் மறுசீரமைப்பு திட்டம்' உருவாக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ்,100 கிலோமீட்டருக்கும் அதிகமான நதிப்பகுதி தூர்வாரப்படும். நதியின் கரைகள் பலப்படுத்தப்பட்டு, 171 சதுர கிலோமீட்டர் பரப்பளவிலான நிலம் மீட்டெடுக்கப்படும். மீட்டெடுக்கப்படும் நிலப்பரப்பில் புதிய நகரங்கள், சாலைகள் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சீன நிதியுதவியுடன் உருவாக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

**ஷேக் ஹசீனா அரசு காட்டிய நிதானம்:**

இந்தத் திட்டத்தை முன்னெடுக்க சீன அரசு பல ஆண்டுகளாகவே வங்காளதேசத்தை வற்புறுத்தி வந்தது. ஆனால், இந்தியாவின் பாதுகாப்பு நலன்களைக் கருத்தில் கொண்டும், இந்தியாவின் அண்டை நாட்டு நட்புறவை மதித்தும், முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான அரசு இந்த திட்டத்திற்குப் இறுதி ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டிருந்தது.

ஆனால், வங்காளதேசத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு, புதிதாகப் பொறுப்பேற்றுள்ள பிரதமர் தாரிக் ரஹ்மான் தலைமையிலான பிஎன்பி அரசு, இந்தியாவின் கவலைகளைப் புறந்தள்ளிவிட்டு இத்திட்டத்தை சீனாவின் 'பெல்ட் அண்ட் ரோடு' திட்டத்தின் கீழ் வேகமாகச் செயல்படுத்த சீன அதிபர் ஷி ஜின்பிங்குடன் கைகோர்த்துள்ளது.

**இந்தியாவிற்கு என்ன ஆபத்து?**

இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் பகுதி, இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களை இந்தியாவின் பிற பகுதிகளுடன் இணைக்கும் குறுகிய நிலப்பகுதியான 'சிலிகுரி காரிடார்' (சிலிகுரி கணவாய் – 22 கி.மீ அகலம் கொண்ட இந்தியாவின் மிக முக்கியமான மூலோபாயப் பகுதி) அருகே அமைந்துள்ளது. தீஸ்தா நதி திட்டத்தை செயல்படுத்தும் 'பவர் சீனா' நிறுவனம், சீனாவின் அரசுக்குச் சொந்தமான ராணுவப் பின்னணி கொண்ட நிறுவனமாகும். நதி மேலாண்மை என்ற பெயரில், இந்திய எல்லைக்கு மிக அருகில் சீன பொறியாளர்களும் ராணுவ தொழில்நுட்ப வல்லுநர்களும் பல ஆண்டுகள் முகாமிட்டிருக்க இத்திட்டம் வழிவகுக்கும். இது இந்தியாவின் எல்லையோரப் பாதுகாப்பிற்கு நேரடி அச்சுறுத்தலாகும்.

**இந்தியாவின் அதிகாரப்பூர்வ எதிர்வினை:**

கடந்த 2024–ஆம் ஆண்டிலேயே, சீனாவை இத்திட்டத்திலிருந்து விலக்கி வைப்பதற்காக, இத்திட்டத்திற்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் நிதியுதவிகளை இந்தியாவே வழங்குவதாக டெல்லி முன்வந்தது. இருப்பினும் வங்காளதேசம் தற்போது சீனாவைத் தேர்ந்தெடுத்துள்ளது.

இது குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் ஊடகப் பேச்சாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால் விடுத்துள்ள அறிக்கையில், "வங்காளதேசத்திற்கான இந்தியாவின் வளர்ச்சி உதவிகள் இருதரப்பு உடன்பாட்டின்படி தொடர்ந்து மறுஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

தீஸ்தா நதி விவகாரத்தில் அண்மையில் நடந்துள்ள அனைத்து மாற்றங்களையும் இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. வரும் நாட்களில் எங்களின் ஒட்டுமொத்த அணுகுமுறையிலும் இந்த நகர்வுகள் கணக்கில் கொள்ளப்படும்" என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# வயநாட்டில் மண்சரிவு: மீட்புபணி தீவிரம்!!



கேரளா, ஜூலை. 07–

வயநாடு அருகே கல்லடியில் இரட்டை சுரங்கம் தோண்டும் பணியின்போது மண்சரிவு ஏற்பட்டது. சுரங்கம் தோண்டும் பணியின்போது பெய்த கனமழை காரணமாக மண்சரிவு ஏற்பட்டுள்ளது. மண்சரிவில் சிக்கிய 20 பேரை மீட்புக்குழுவினர் பத்திரமாக மீட்டனர்.

# அடிக்கடி மின்தடை: பொதுமக்கள் திடீர் சாலை மறியல்!

மதுரை, ஜூலை. 07–

மதுரைபெருங்குடிவிமானநிலையசாலையில்உள்ளஅம்பேத்கர்நகர்பகுதியில்அடிக்கடிமின்தடைஏற்படுவதாககூறிபொதுமக்கள்திடீர்சாலைமறியல் . பெருங்குடிஅம்பேகர்நகர்பொதுமக்கள் திடீர் சாலைமறியலால்40நிமிடம்போக்குவரத்துபாதிப்பு .... மதுரை விமான நிலையம்செல்லும்வழியில்உள்ளபெருங்குடி அம்பேத்கர்நகரில் அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. இது குறித்து மின்வாரியஊழியர்கள்மற்றும்மாநகராட்சி களிடம் புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காததை தொடர்ந்துபொதுமக்கள் இரவு 7 மணிஅளவில் திடீர்சாலை மறியலில்ஈடுபட்டனர்பொதுமக்கள் திடீர் சாலை மறியலில்தொடர்ந்து சுமார் 40 நிமிடம்போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டதுஅதனைத்தொடர்ந்துஅவனியாபுரம்போலீசார்காவல் ஆய்வாளர் ராமர்தலைமையில்பொதுமக்களிடம்சமரசபேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர் அதனைதொடர்ந்து மின்வாரிய ஊழியர்கள்அம்பேத்கர்நகர்பகுதியில் உடனடி மின்இணைப்பை சரிசெய்தனர். இதனைத் தொடர்ந்துபொதுமக்கள்சாலை மறியலைகைவிட்டு புறப்பட்டு சென்றனர்.



மதுரை மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி முதலாம் ஆண்டு மாணவிகளுக்கான புத்தொளி நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கல்லூரியின் பொறுப்பு முதல்வர் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து மாணவிகளுக்கு வாழ்த்துரை வழங்கினார்.






தற்போது இருக்கும் இளைஞர்கள் காதல் விடயத்தில் கெட்டித்தனமாக இருந்து வருகிறார்கள். ஆனால் இதிலும் சிலருக்கு இந்த காதல் என்றாலே செட்டாகாது என நினைத்து கொண்டு அது பற்றிய நினைப்பு கூட இல்லாமல் இருந்து வருகிறார்கள்.

அப்புடியும் அவர்கள் காதலித்து திருமணம் செய்து கொண்டாலும் அவர்களுக்கு ரொமன்ஸ் என்ற ஒன்று வராது. இவ்வாறான சிக்கலான நிலைமையில் தான் தற்காலத்தில் இருக்கும் சில இளைஞர்கள் இருந்து வருகிறார்கள்.

திருமண பந்தத்தில் இருக்கும் அழகை எடுத்து காட்டுவதற்கு இந்த ரொமன்ஸ் இருந்து வருகிறது. இந்த விடயத்தில் வீக்காக இருக்கும் தம்பதிகள் நீண்டக்காலம் சேர்ந்து வாழமாட்டார்கள்.

இது கூட ராசிப்பலன்கள் வைத்து கணிக்கப்படுகிறது என தகவல் வெளியாகியுள்ளது.

அந்த வகையில் என்ன பண்ணாலும் ரொமன்ஸ் வராத ராசிக்காரர்கள் தொடர்பில் தொடர்ந்து பார்க்கலாம்.

**1. ரிஷப ராசி**

ரிஷப ராசிக்காரர்கள் என்ன தான் காதல் விவகாரங்கள் ஆக்டிவாக இருந்தாலும் ரொமன்ஸ் என்று வரும் போது சற்று தயங்குவார்கள். அதிலும் இந்த ராசிக்காரர்களுக்கு திருமண சுகத்தை தரக்கூடிய சுக்கிரன் ஆதிக்கமுள்ளவர்கள், இவர்கள் எதற்கு எடுத்தாலும் கோவப்படுவதால் இவர்களுக்கான காதல் மற்றும் திருமண வாழ்க்கை நிலைக்காமல் செல்வதற்கு வாய்ப்பு அதிகம் இருக்கிறது.

**2. கன்னி ராசி**

கன்னி ராசியில் பிறந்தவர்களுக்கு அதிபதியாக புதன் இருப்பார். இவர்கள் நுணுக்கமான அறிவு கொண்டவர்களாக காணப்படுவார்கள். இவர்களின் காதல் வாழ்க்கை எடுத்து பார்த்தால் அது நான்கு சுவருக்குள் மாத்திரம் இருக்கும். இவர்களுக்கு வெட்கம் அதிகமாக இருப்பதால் காதலை காட்டுவதற்கு கூச்சப்படுவார்கள். இவர்களை பொருத்தமட்டில் காதல் என்பது குறிப்பிட்ட இருவருக்கு மாத்திரம் இருக்கிறது எனக் கூறுவார்கள்.

**3. விருச்சிக ராசி**

விருச்சிக ராசிக்கார்கள் தாம்பதிய வாழ்க்கையில் அதிக ஆர்வம் காட்டுவார்கள். தன்னுடைய துனை நெருக்கமாகவே இருக்க வேண்டும் என நினைப்பார்கள். தன்னுடைய துணையிடம் எந்த நேரத்திலும் காதலை காட்டி கொண்டே இருப்பார். இந்த ராசிக்காரர்களுக்கு திருமண வாழ்க்கை அமோகமாக இருக்கும்.

**4. மகர ராசி**

மகர ராசிக்காரர்கள் உழைப்பில் அதிக நாட்டம் காட்டுவார்கள். இவர்கள் மரபு வழி மார்க்கத்தை விரும்புவார்கள். இவர்கள் திருமண வாழ்க்கையில் ரொமன்ஸ் காட்டுவது குறைவாக காணப்படும். ஆனால் மனைவியுடன் உறவில் இருக்கும் போது அதனை காட்டுவார்கள்.

**5. கும்ப ராசி**

கும்ப ராசிக்காரர்கள் உழைப்பில் நாட்டம் கொண்டவர்கள். இவர்கள் அதிகமாக இரகசிய உறவு மீது நாட்டம் காட்டுவார்கள். இவர்கள் தகாத உறவில் இருப்பதால் திருமண வாழ்க்கை மீது நாட்டம் குறைவாக இருக்கும். மேலும் மற்றவர்கள் முன் இதனை வெளிப்படையாக காட்டுவார்கள்.

**முக்கிய குறிப்பு**

மேற்குறிப்பிட்ட குறிப்புகள் அனைத்தும் ராசிகளை வைத்து கணித்த கணிப்பு மாத்திரமே இது தொடர்பாக மேலதிக தகவல்களை உங்களுக்கு ஜோதிடரை நாடலாம்.

# முன்னாள் அமைச்சர் துரைமுருகனுக்கு எதிரான வழக்கு தள்ளுபடி!



சென்னை, ஜூலை. 07–

முன்னாள் அமைச்சர் துரைமுருகனுக்கு எதிரான தேர்தல் வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

கடந்த 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் காட்பாடி தொகுதியில் போட்டியிட்ட துரைமுருகன், 746 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்த நிலையில், தபால் வாக்குகள் எண்ணப்பட்டதில் முறைகேடு நடந்துள்ளதாகவும், துரைமுருகனின் வெற்றியை செல்லாது என அறிவித்து தன்னை வெற்றி பெற்றதாக அறிவிக்கக் கோரியும் அதிமுக வேட்பாளர் ராமு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கின் விசாரணை சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி இளந்தளிரன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, அடுத்த சட்டப்பேரவைத் தேர்தலே நடந்து முடிந்துவிட்ட நிலையில், அதிமுக வேட்பாளர் ராமு தொடர்ந்த வழக்கு செல்லத்தக்கதல்ல என்று அறிவித்து, வழக்கை தள்ளுபடி செய்வதாக நீதிபதி உத்தரவிட்டார்.




# 30 நாள் இந்த டயட்... உடலில் நடக்கும் அதிரடி மாற்றங்கள்!




30 நாட்கள் பால் மற்றும் சர்க்கரையை தவிர்த்தால் உடல் எடை குறையவும், ரத்தச் சர்க்கரை சீராகவும், செரிமானம் மேம்படவும் வாய்ப்புள்ளதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

**முக்கிய பலன்கள்:**

உடல் எடை குறையலாம்
நாள் முழுவதும் சுறுசுறுப்பு
செரிமானம் மேம்படும்
சருமம் பொலிவடையலாம்
நல்ல தூக்கம் கிடைக்கலாம்

தவிர்க்க வேண்டியது: பால், தயிர், இனிப்புகள், குளிர்பானங்கள், பேக்கரி மற்றும் ஃபாஸ்ட் ஃபுட்.

**கவனம்:** கர்ப்பிணிகள், நீரிழிவு மற்றும் பிற உடல்நலப் பிரச்சினை உள்ளவர்கள் மருத்துவரின் ஆலோசனையுடன் மட்டுமே இந்த டயட்டை பின்பற்ற வேண்டும்.

# டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி பிறந்தநாள் விழா கொண்டாட்டம்!



திருப்பூர், ஜூலை. 07–

பாரதிய ஜனதா கட்சி திருப்பூர் வடக்கு மாவட்ட தலைவர் சீனிவாசன் வழிகாட்டுதலின்படி நெருப்பெரிச்சல் மண்டல் சார்பாக மண்டல தலைவர் உதயகுமார் தலைமையில் மண்டல பொதுசெயலாளர் கார்த்திகேயன் முன்னிலையில் டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி அவர்களுடைய 125 வது ஆண்டு பிறந்தநாள் விழா பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.. மண்டல துணைத் தலைவர் சரத் பிரகாஷ், மண்டல் செயலாளர் சிவா,மோகன் ,சமூக ஊடக பிரிவு மாவட்ட செயலாளர் தனசேகர், விவசாய அணி மாவட்ட செயலாளர் ரத்தினசாமி, ஊடகப்பிரிவு மாவட்ட செயலாளர் முருகானந்தம், சிறுபான்மை அணி மாவட்ட பொதுச் செயலாளர் சபி, மீனவர் பிரிவு மண்டல் தலைவர் வடிவேல், சக்தி கேந்திர பொறுப்பாளர் மோகன், ஐயப்பன், மத்திய அரசு நலத்திட்ட பிரிவு மண்டல் தலைவர் குணசேகர், மண்டல் மீனவர் அணி துணைத்தலைவர் சங்கர்,முருகன் சர்வீஸ் சென்டர் பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# சற்றே குறைந்த தங்கம் விலை!



சென்னை,ஜூலை. 07–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.880 குறைந்து ரூ.1,07,600–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.110 குறைந்து ரூ.13,450–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையில் மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.250–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# திறந்த மறுநாளே மூடப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம்: நடவடிக்கை கோரி மனு!



ராமநாதபுரம், ஜூலை. 07–

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் 202324ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம், கட்டிடப் பணிகள் முழுமையடையாத நிலையில் திறந்து வைக்கப்பட்டு மறுநாளே மூடப்பட்டதாக கீழக்கரை பொதுமக்கள் கூட்டமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களின் மருத்துவத் தேவைக்காக அமைக்கப்பட்ட இந்த சுகாதார நிலையம் இன்று வரை செயல்படாததால், அவசர சிகிச்சைக்காக தொலைதூர மருத்துவமனைகளை நாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். எனவே, கட்டிடப் பணிகளை விரைந்து முடித்து, மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களை நியமித்து, ஆரம்ப சுகாதார நிலையத்தை உடனடியாக மக்கள் பயன்பாட்டிற்கு திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரிடம் கீழக்கரை பொதுமக்கள் கூட்டமைப்பு மனு அளித்துள்ளது.

# அரசு வழக்கறிஞர்கள் நியமனம் 100% நேர்மையாக நடக்கிறது: அமைச்சர் நிர்மல்குமார்!

சென்னை, ஜூலை. 07–

சென்னை தலைமை செயலகத்தில் மின்சாரம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் நிர்மல்குமார் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:–

அரசு வழக்கறிஞர் நியமனம் குறித்து தவறான தகவல்கள் பரப்பப்படுகின்றன. இதுவரை அரசு வழக்கறிஞர்களாக யாரும் நியமிக்கப்படவில்லை; நேற்று மாலை முதல் தான் அரசு வழக்கறிஞர்கள் நியமனத்திற்கான அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு வருகிறது. அரசு வழக்கறிஞர்கள் நியமனம் 100% நேர்மையாகவும், வெளிப்படையான முறையிலும் நடைபெறுகிறது.

முறையாக விண்ணப்பம் பெறப்பட்டு அரசு வழக்கறிஞர் நியமனம் நடைபெறுகிறது. தகுதியானவர் மட்டுமே அரசு வழக்கறிஞராக நியமிக்கப்படுவார்கள். அரசு வழக்கறிஞர் நியமனத்தில் யாராவது



பணம் பெற்றால் புகார் தெரிவிக்கலாம். எங்காவது முறைகேடு நடைபெறுவதாக புகார் கொடுக்கப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அரசு வழக்கறிஞர் நியமனத்தில் எந்த பாகுபாடும் இல்லை. இப்போது கொடுக்கப்படும் அரசு வழக்கறிஞர்கள் நியமனம் என்பது ஆறு மாத காலத்திற்கானது மட்டுமே. செயல்பாடுகளை பொறுத்து 6 மாதத்திற்கு பிறகே அரசு வழக்கறிஞர்கள் நிரந்தரமாக்கப்படுவர். அதிகபட்சம் 800 அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட உள்ளனர். இன்னும் தேவைப்பட்டால் கூடுதலாக அரசு வழக்கறிஞர்களை நியமிக்கவும் அரசு தயாராக உள்ளது. இன்று அல்லது நாளைக்குள் அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்படுவார்கள்.

அரசு ரீதியாக, காவல்துறை ரீதியாக முறையாக சரிபார்த்து பின்னரே அரசு வழக்கறிஞர் நியமனம் செய்யப்படுகின்றனர். திமுக ஆட்சியில் மாவட்டச் செயலாளர்கள் லஞ்சம் பெற்றுக் கொண்டு அரசு வழக்கறிஞர் நியமனம் செய்தனர். 45 ஆண்டுகளுக்கு பின் இப்போது தான் அரசு வழக்கறிஞர் நியமனம் நேர்மையாக நடைபெறுகிறது. அரசு வழக்கறிஞர்கள் நேர்மையாக செயல்படுவதை உறுதிப்படுத்தவே முதலில் தற்காலிக நியமனம். அரசு வழக்கறிஞர்கள் திறமையாக செயல்படவில்லை என்றால் தொடர்ந்து பணியாற்ற முடியாது.

கரூர் சம்பவம் நடந்து 1 மாதம் வரைக்கும் அங்க நேர்ல போய்டு பாக்க எவ்வளவோ முயற்சி பண்ணோம் எங்கள அப்போ தி.மு.க அரசு விடவே இல்ல, அப்பறம் தான் அவங்கள இங்க அழைத்து பாத்தோம். இப்போ முதல்–அமைச்சராக இருக்கும் போது கூட அவர் அங்க போகக்கூடாதுனு என்னலாம் பண்ணனுமோ அதுலாம் பண்றாங்க.. அதையெல்லாம் தாண்டி அவர் அங்கே செல்வார்.. எங்களுக்கு அது வாழ்நாள் துயரம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# நாங்க தான் ஒரிஜினல்.. கட்சியை கைப்பற்ற துடிக்கும் அதிருப்தியாளர்கள்!

மேற்குவங்காளம், ஜூலை. 07–

மேற்கு வங்கத்தில் தேர்தல் தோல்விக்கு பின் மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி இரண்டு பட்டது. திரிணாமுல் காங்கிரஸின் மொத்தமுள்ள 80 எம்.எல்.ஏக்களில் 58 பேர் அதிருப்தியாளர்களாகி தனித்து செயல்படுகின்றனர்.

அதிக எம்எல்ஏக்கள் உள்ளதால் அவர்களுக்கே எதிர்க்கட்சி அந்தஸ்தை அம்மாநில சட்டமன்ற சபாநாயகர் வழங்கியுள்ளார். அதிருப்தியாளர்களின் தலைவர் ரிதர்பா எதிர்க்கட்சி தலைவர் அந்தஸ்துடன் உள்ளார்.

இதனிடையே இவர்கள் திரிணாமுல் காங்கிரசை அதை உருவாக்கி சக்தி வாய்ந்த கட்சியாக கட்டியெழுப்பிய மம்தா பானர்ஜியிடம் இருந்து முழுமையாக பிடுங்கிக்கொள்ள தீவிரம் காட்டி வருகின்றனர்.

இது மறைமுகமாக பாஜக செய்யும் சதி என சாடும் மம்தா, தைரியம் இருந்தால் அதிருப்தியாளர்கள் பாஜகவில் சேர்ந்து தன்னை நேரடியாக எதிர்க்க வேண்டும்



என சவால் விடுத்தார்.

ஆனால் அதை காதில் வாங்காத அதிருப்தியாளர்கள் திரிணாமுல் காங்கிரசை வளைத்துப்போடும் தீவிரத்தில் முதலில் கட்சி தலைமை அலுவலகத்தை கைப்பற்றினர். கட்சியின் சின்னம் தங்களுக்கு தான் சொந்தம் என தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் எழுதியுள்ளனர். அதில் கட்சியின் தலைவர், நிர்வாகிகளை உள்ளடக்கிய அமைப்பின் பதவிக்காலம் முடிந்துவிட்டதாக அவர்கள் வாதிட்டுருந்தனர். இதை பாஜகவின் கைக்கூலி என மம்தாவால் விமர்சிக்கப்படும் தேர்தல் ஆணையம் பரிசீலித்து வருகிறது.

கட்சி தங்களுக்கே சொந்தம் என மம்தா தரப்பு தேர்தல் ஆணையத்துக்கு விரிவான விளக்கம் ஒன்றை தற்போது அனுப்பியுள்ளது.

அதில் கட்சியின் தற்போதைய தலைவர், நிர்வாகிகளை உள்ளடக்கிய அமைப்பு முழுமையாக செல்லுபடியாகும் என்றும் அது 2027 வரை தொடரும் என்றும் மம்தா தரப்பு கூறியுள்ளது.

தேர்தல் ஆணையத்திற்கு அளித்த பதிலில், திரிணாமூல் காங்கிரஸ், கட்சியின் அரசியலமைப்பின்படி அமைப்பு குழுக்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் என்று கூறியுள்ளது. கட்சியின் கூற்றுப்படி, 2022ல் நடைபெறும் அமைப்புத் தேர்தல்களுக்குப் பிறகு, தற்போதைய குழுவின் பதவிக்காலம் 2027 வரை அமலில் இருக்கும்.

கிளர்ச்சி தரப்பின் கூற்று உண்மையாக இருந்தால், கட்சியின் தேர்தல் சின்னத்தையும் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பங்களையும் பயன்படுத்தி 2026 சட்டமன்றத் தேர்தலில் அவர்கள் எவ்வாறு போட்டியிட்டார்கள் என்று மம்தா தரப்பு கேள்வி எழுப்பியுள்ளது. கேள்வி எழுப்பியது.

மேலும் ஜூன் 22 ஆம் தேதி கிளர்ச்சிக் குழுவால் நடத்தப்பட்ட சிறப்பு மாநாடு அரசியலமைப்புக்கு விரோதமானது என்றும் மம்தாதரப்புதெரிவித்துள்ளது. எனவே, இந்தக் கூட்டத்தின் முடிவுகளுக்கு சட்டப்பூர்வ செல்லுபடி இல்லை.

அங்கீகரிக்கப்பட்ட நிர்வாகிகள் மற்றும் கட்சி அமைப்புத் தேர்தல்கள் தொடர்பான ஆவணங்களை இரு அணிகளிடம் இருந்தும் தேர்தல் ஆணையம் கோரியுள்ளது. ஆனால் அனைத்து தகவல்களும் ஆணையத்திடம் ஏற்கனவே உள்ளதாக மம்தா தரப்பு கூறுகிறது. இரு கட்சிகளிடமிருந்தும் பெறப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்த பிறகு, அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து ஆணையம் முடிவு செய்யும்.

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் பெயர் 'சமூக நீதித்துறை' என மாற்றம்!

சென்னை, ஜூலை. 07–

தமிழ்நாடு அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இச்சமூகத்தினரின் கல்வி, பொருளாதாரம் மற்றும் சமூக மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகிறது. பள்ளி–கல்லூரி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை, இலவச விடுதிகள், திறன் மேம்பாட்டுப் பயிற்சி, வீட்டுமனைப் பட்டா வழங்குதல்



போன்றவை இத்துறையின் முக்கியச் செயல்பாடுகளாகும்.

இந்த நிலையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் பெயர் 'சமூக நீதித்துறை' என மாற்றம் செய்து தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் சாய்குமார் அரசாணை வெளியிட்டுள்ளார். அரசு ஆவணங்கள் மற்றும் கோப்புகளில் பெயர் மாற்றம் செய்யும் வகையில், தமிழ்நாடு வணிக விதிகளில் திருத்தம் செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# ஆன்லைன் லாட்டரியால் இரட்டை ஆபத்து: சைபர் கிரைம் போலீசார் எச்சரிக்கை!

சென்னை, ஜூலை. 07–

தமிழகத்தில் பொதுமக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் லாட்டரி சீட்டுகள் தடை செய்யப்பட்டுள்ளன. தடையை மீறி கேரள மாநில லாட்டரியை விற்பனை செய்வது தெரியவந்தால் கைது நடவடிக்கைகளையும் போலீசார் மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், அதிர்ஷ்டக் காற்றில் பறக்க நினைக்கும் சிலரை குறிவைத்து ஆன்லைன் மோசடி கும்பல்கள் தற்போது புதிய வலையை விரித்துள்ளன. அண்டை மாநிலமான கேரளத்தில் லட்டரிக்கு தடையில்லை. அங்கு தாராள விற்பனை நடக்கிறது. இதனைப் பயன்படுத்திக் கொள்ளும் மர்ம நபர்கள், தமிழகத்திலும் வாட்ஸ்அப், டெலிகிராம் மற்றும் சில பிரத்யேக செயலிகள் மூலம், 'கேரள லாட்டரி' எங்களிடம் ஆன்லைனில் கிடைக்கும்; வீட்டில் இருந்தபடியே கோடிஸ்வரன் ஆகலாம்' என ஆசை வார்த்தைகளை அள்ளி வீசுகின்றனர்.




இதை நம்பி, தமிழகத்தைச் சேர்ந்த பலர் தாங்கள் உழைத்த பணத்தை ஆன்லைன் மூலம் மோசடி நபர்களின் வங்கி கணக்குகளுக்கு அனுப்பி ஏமாற்றம் அடைகின்றனர். ஒரு முறை பணத்தை அனுப்பிவிட்டால், அந்த எண்களுக்குப் பரிசு விழுந்தாலும் சரி, விழாவிட்டாலும் சரி, அனுப்பிய பணத்தையோ அல்லது பரிசுத் தொகையோ திரும்பப் பெறவே முடியாது. இப்படி பணத்தை இழந்து பாதிக்கப்பட்டவர்கள், செய்வதறியாது சைபர் கிரைம் போலீஸ் நிலையங்களை நோக்கி புகார் கொடுக்கச் செல்கின்றனர்.

தமிழகத்தில் சட்டப்படி லாட்டரி சீட்டு வாங்குவதும், விற்பதும், கைவசம் வைத்திருப்பதும் குற்றமாகும். இதனால், 'ஆன்லைன் லாட்டரியில் பணத்தை இழந்துவிட்டேன்' என்று போலீஸ் நிலையத்தில் புகார் கொடுக்கச் செல்பவர்கள் மீதும் சட்டம் பாயும் சூழ்நிலை ஏற்படுகிறது. தடை செய்யப்பட்ட ஒரு பொருளை வாங்க முயன்றதே குற்றம் என்பதால், புகார் கொடுக்க வருபவர்கள் மீதே வழக்குப்பதிவு செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.


பணத்தையும் இழந்து, வழக்கிலும் சிக்கினால் சம்பந்தப்பட்டவர்களின் குடும்பமே பாதிக்கப்படும் என்பதால், போலீசார் மனிதாபிமான அடிப்படையில் தற்போதைக்கு வழக்குப்பதிவு செய்யாமல் தவிர்த்து வருகின்றனர். மாறாக, பாதிக்கப்பட்டவர்களுக்கு அறிவுரைகளை கூறுவதோடு, எச்சரித்தும் அனுப்பி வருகின்றனர்.

இதுகுறித்து சைபர் கிரைம் போலீசார் கூறுகையில், 'ஆன்லைன் லாட்டரி என்பது ஒரு ஏமாற்று வேலை. அதில் விழும் எண்கள் அனைத்தும் மோசடி கும்பலால் போலியாக உருவாக்கப்படுபவை. தமிழகத்தில் லாட்டரி தடை செய்யப்பட்டுள்ளதால், ஆன்லைன் மூலமாக கூட அதனை வாங்குவது சட்டப்படி குற்றமாகும். எனவே, பொதுமக்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை இதுபோன்ற மோசடி வலைகளில் சிக்கிப் பறி கொடுக்க வேண்டாம். பணத்தையும் இழந்து விட்டு, வழக்கிலும் சிக்கிக் கொள்ளும் நிலைமை உருவாகும்' என்றனர்.

# வேலை வாய்ப்பு

## எஸ்பிஐ: 49 சட்ட அதிகாரி பணியிடங்கள்!

நிறுவனம்: State Bank of India (SBI)
அறிவிப்பு எண்: CRPD/SCO/2026–27/02
வேலைவகை: மத்திய அரசு வேலை
பணி: நிரந்தர (Regular)
பதவிகள்: Assistant Manager (Law), Deputy Manager (Law)
காலியிடங்கள்: 49
பணியிடம்: இந்தியா முழுவதும்
ஆன்லைன் விண்ணப்பம் தொடக்கம்: 24.06.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 14.07.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்–
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://sbi.bank.in/




# ஜனநாயகன் திரைப்படத்தில் இத்தனை காட்சிகள் நீக்கப்படுகிறதா?




ஜனநாயகன் திரைப்படத்திற்கு சென்சார் தரப்பில் இருந்து 13 கட்ஸ் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. 13 காட்சிகள் நீக்கப்படும் நிலையில், இது விஜய் ரசிகர்களுக்கு அதிர்ச்சியை கொடுத்துள்ளது. விரைவில் ரிலீஸ் தேதி தயாரிப்பு நிறுவனத்திடம் இருந்து அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சென்னை கடற்கரை - தாம்பரம் ரெயில்கள் தாமதம்; பயணிகள் அவதி!



சென்னை, ஜூலை. 07–

புறநகர் மின்சார ரெயில் போக்குவரத்து சென்னை மக்களின் முக்கிய போக்குவரத்து முறையாக உள்ளது. குறிப்பாக, சென்னை கடற்கரை – தாம்பரம் வழித்தடத்தில் தினமும் லட்சக்கணக்கான பயணிகள் பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

அலுவலகம் செல்வோர், மாணவ – மாணவியர்கள், பொதுமக்கள் என அனைத்து தரப்பினரும் இந்த ரெயில் சேவையை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், நுங்கம்பாக்கத்தில் ரெயில் தண்டவாளத்தில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இதனால் தாம்பரம் – சென்னை கடற்கரை மின்சார ரெயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இந்த வழித்தடத்தில் ரெயில்கள் தாமதமாக இயக்கப்படுகின்றன. இதனால், அலுவலகம் செல்வோம், பள்ளி,கல்லூரி செல்வோர், பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளது.

தண்டவாள விரிசலை சரிசெய்யும் பணியில் ரெயில்வே ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




# ‘சமூகநீதியின் முன்னோடி இரட்டைமலை சீனிவாசன்’ - முதல்-அமைச்சர் விஜய் புகழாரம்!



சென்னை, ஜூலை. 07–

தமிழ்நாடு முதல்–அமைச்சர் விஜய், எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:–

சமூகநீதியின் முன்னோடியாகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக் குரலாகவும் திகழ்ந்த திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன்,

பிறந்தநாளில் அவருக்கு எனது மரியாதை யையும் புகழ் வணக்கத்தையும் செலுத்துகிறேன்.

கல்வி, சுயமரியாதை, சமத்துவம் மற்றும் சமூக நீதிக்காக அவர் ஏற்றிய ஒளிவிளக்கு, தலைமுறைகளைக் கடந்து நம்மை வழிநடத்தும் நிலை யான பேரொளியாகத் திகழ்கிறது. அவரது உயரிய இலட்சியங்களைப் போற்றியும் பின்பற்றியும், சமத்துவமும் மனிதநேயமும் நிறைந்த தமிழ்நாட்டை உருவாக்கிடுவோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எம்.எஸ்.தோனிக்கு மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் வாழ்த்து!



சென்னை, ஜூலை. 07–

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது:– கேப்டன் கூல் எம்.எஸ். தோனிக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள். மைதானத்தில் இருந்தாலும், அதற்கு வெளியே இருந்தாலும் உங்கள் அமைதியான அணுகுமுறை, சிறந்த தலைமைத்துவம் மற்றும் காலத்தால் அழியாத கவர்ச்சி ஆகியவை கோடிக்கணக்கான மக்களுக்கு தொடர்ந்து உத்வேகம் அளித்து வருகின்றன. உங்களை மீண்டும் களத்தில் விளையாடக் காணும் எதிர்பார்ப்பு இன்றும் அதே ஆவலுடன் தொடர்கிறது.

நீங்கள் நல்ல உடல்நலம், மகிழ்ச்சி மற்றும் மேலும் பல ஆண்டுகள் வெற்றிகளுடன் வாழ மனமார்ந்த வாழ்த்துகள்.

இவ்வாறு கூறியுள்ளார்.

# தொடரும் திமுகவுடன் நட்பு- திருமாவளவன்!



சென்னை, ஜூலை. 07–

சென்னையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

* அமைச்சரவையில் இடம் பெற்றதாலேயே கூட்டணியில் இணைந்ததாக அர்த்தம் அல்ல.

* கூட்டணி தொடர்பாக தான் ஆதரவு கட்சிகளுடன் முதலமைச்சர் ஆலோசனை நடத்தினார். ஆனால் அதில் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

* இன்னும் தமிழக வெற்றிக் கழகம் தலைமையில் கூட்டணி அமையவில்லை.

* அமைச்சரவையில் இடம் பெற்றதும் திமுகவுக்கு துரோகம் இழைத்து விட்டதாக பேசுகிறார்கள்.

* விசிகவில் இருந்து விலகிய ஒருவரை திமுகவில் இணைத்தது எங்களுக்கு அதிர்ச்சி கொடுத்தது.

* திமுகவுடன் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நட்பு தொடர்கிறது.

* மு.க.ஸ்டாலினின் கவனத்திற்கு கொண்டு சென்ற பிறகு தான் தவெக அரசை விசிக ஆதரித்தது என்று அவர் கூறினார்.

# செந்தில்பாலாஜி மீது அடுத்தக்கட்ட நடவடிக்கை என்ன?




சென்னை, ஜூலை. 07–

செந்தில்பாலாஜி மீது அடுத்தக்கட்ட நடவடிக்கை என்ன? என்பது குறித்து போலீசார் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

செந்தில்பாலாஜியையும், அவரது சகோதரர் அசோக்குமாரையும் விசாரணைக்கு நேரில் ஆஜராகுமாறு திருவல்லிக்கேணி போலீசார் சம்மன் அனுப்பினார்கள். அந்த சம்மனில், ஜூலை 6–ந்தேதி ஆஜராகவேண்டும் என்று கூறப்பட்டது. அவர்கள் இருவரும் திருவல்லிக்கேணி போலீஸ் நிலையத்தில் ஆஜராவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இதுதொடர்பாக செய்தி சேகரிக்க பத்திரிக்கையாளர்களும், புகைப்படக்காரர்களும் திருவல்லிக்கேணி போலீஸ் நிலையத்தில் காத்திருந்தனர். ஆனால், எதிர்பார்த்தபடி செந்தில்பாலாஜியும், அவரது சகோதரர் அசோக்குமாரும் போலீஸ் விசாரணைக்கு ஆஜராகவில்லை. எனவே அவர்கள் மீது அடுத்தக்கட்ட நடவடிக்கை என்ன? என்பது குறித்து போலீசார் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே அவர்கள் இருவரும் வெளிநாடு தப்பி செல்லாமல் தடுப்பதற்காக, அனைத்து விமான நிலையங்களுக்கும் ‘லூக்–அவுட்’ நோட்டீஸ் கொடுத்து, போலீசார் உஷார்படுத்தியுள்ளனர். அவர்களை கைது செய்ய தேடுதல் வேட்டை, மேலும் தீவிரப்படுத்தப்படும் என்று தெரிகிறது. இல்லாவிட்டால் இன்னொரு முறை அவர்களுக்கு சம்மன் அனுப்பலாமா? என்பது குறித்தும் போலீசார் ஆலோசித்து வருகிறார்கள்.

# தேர்தல் வழக்கில் முதல்வர் விஜய்க்கு ஐகோர்ட் நோட்டீஸ்!



சென்னை, ஜூலை. 07–

பெரம்பூர், திருச்சி கிழக்கு தொகுதிகளின் தேர்தல் வழக்குகள் தொடர்பாக முதல்வர் விஜய்க்கு சென்னை ஐகோர்ட் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

முதல்வர் விஜய், பெரம்பூர் தொகுதியில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதை எதிர்த்து, தி.மு.க. வேட்பாளர் ஆர்.டி. சேகர் மற்றும் வாக்காளர்கள் தினேஷ், லட்சுமி நரசிம்மன் ஆகியோர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர். திருச்சி கிழக்கு தொகுதியில், விஜய் வெற்றி பெற்றதை எதிர்த்து தி.மு.க. வேட்பாளர் இனிகோ இருதயராஜ் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த நான்கு வழக்குகளும் இன்று (ஜூலை 07) ஐகோர்ட் நீதிபதி வி.லட்சுமி நாராயணன் முன்பு விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் முதல்வர் விஜய்க்கு சென்னை ஐகோர்ட் நோட்டீஸ் அனுப்பி உள்ளது. மனுக்களில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்த பின் 3 வாரங்களில் பதிலளிக்க நீதிபதி உத்தரவிட்டார்.

அதேபோல் அமைச்சர் ஆதவ், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்றதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகளில் பதிலளிக்க ஐகோர்ட் நோட்டீஸ் அனுப்பி உள்ளது. 2021ம் ஆண்டு காட்பாடி தொகுதியில் முன்னாள் அமைச்சர் துரைமுருகன் வெற்றியை எதிர்த்து அதிமுக வேட்பாளர் வி.ராமு தொடர்ந்த வழக்கை ஐகோர்ட் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

# வருவாய், ஜாதி, இருப்பிட சான்றிதழ் பெற புதிய நடைமுறை?




சென்னை, ஜூலை. 07–

வருவாய், ஜாதி, இருப்பிடம், முதல் திருமணம், முதல் பட்டதாரி உள்ளிட்ட சான்றிதழ்களை விரைவாக வழங்க புதிய நடைமுறையை வருவாய் துறை பரிசீலித்து வருகிறது.

**முக்கிய அம்சங்கள்:**

தற்போது விண்ணப்பங்கள் VAO, துணை தாசில்தார்/தாசில்தார் ஆய்வுக்குப் பிறகே சான்றிதழ் வழங்கப்படுகிறது.


புதிய நடைமுறையில் SC/ST அல்லாதோருக்கான சில சான்றிதழ்களில் வருவாய் ஆய்வாளர் (RI) ஆய்வை நீக்கஆலோசனை நடைபெறுகிறது.

இதனால் VAO சரிபார்ப்புக்குப் பிறகு விண்ணப்பம் நேரடியாக துணை தாசில்தாரிடம் செல்லும்.

இதன் மூலம் சான்றிதழ்கள் விரைவாக வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாற்றம் குறித்து வருவாய் துறை பரிசீலனை செய்து வருகிறது; இறுதி உத்தரவு இன்னும் வெளியிடப்படவில்லை.

# மின் பணியாளர்களுக்கு பணியிட மாற்ற கலந்தாய்வு!



சென்னை, ஜூலை. 07–

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஆன்லைனில் பணியிட மாறுதல் கலந்தாய்வு நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் கடைப்பிடிக்கப்படும் முக்கிய விதிமுறைகள் மற்றும் தகவல் களை மின்சார வாரியம் அறிவிப்பாக வெளியிட்டுள்ளது. அதில் “பணியிட மாறுதல் விண்ணப்பங்கள் எச்.ஆர்.எம்.எஸ். ஊழியர்கள் போர்டலில் மட்டுமே பெறப்படும். பணியிட மாறுதல்கள் அனைத்தும் முற்றிலும் வெளிப்படையான ஆன்லைன் கலந்தாய்வு மூலமாக மட்டுமே நடக்கும். பணியிடத்தில் ஒரு ஆண்டை நிறைவு செய்தவர்களுக்கு மட்டுமே பணியிட மாற்றத்திற்கு விண்ணப்பிக்க தகுதி உள்ளது. இந்த நடைமுறையின்படி, பணியிட மாறுதலுக்கான உத்தரவுகள் ஒவ்வொரு மாதமும் 10–ந் தேதிக்குள் அதிகாரப்பூர்வமாக வழங்கப்படும்.

பணியாளர்கள் விரும்பும் இடங்களை வெளிப்படையாக தேர்ந்தெடுக்க, கணினி மற்றும் இணையம் வாயிலான கலந்தாய்வு முறைகள் பின்பற்றப்படுகின்றன. இனி கலந்தாய்வு மூலமே பணி மாறுதல்கள் நடக்கும்’’ என தமிழ்நாடு மின்சார வாரியம் தெரிவித்துள்ளது.

# வெனிசுலா நிலநடுக்கம்: 3,500-ஐ கடந்த பலியானோர் எண்ணிக்கை!




கராகஸ், ஜூலை 07–

தென் அமெரிக்காவில் அமைந்துள்ள நாடு வெனிசுலா. இந்நாட்டில் கடந்த 24ம் தேதி அடுத்தடுத்து 2 பயங்கர நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. ரிக்டர் அளவில் 7.2 மற்றும் 7.5 என பதிவான இந்த நிலநடுக்கங்களால் கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகின. இந்நிலையில், இந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 3,500ஐ கடந்துள்ளது. அதன்படி, நிலநடுக்கத்தில் உயிரிழந்தோ எண்ணிக்கை 3,535 ஆக உயர்ந்துள்ளது. மேலும், நிலநடுக்கத்தில் 16,740 பேர் படுகாயமடைந்துள்ளனர். அதேபோல், நிலநடுக்கத்தால் 17,854 பேர் வீடுகளை இழந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

# ரஷ்யாவின் முக்கிய எண்ணெய் ஆலை குறிவைத்த உக்ரைன்!



ரஷ்யா, ஜூலை. 07–

ரஷ்யா–உக்ரைன் போர் மீண்டும் தீவிரமடைந்துள்ள நிலையில், உக்ரைன் தனது நீண்ட தூர ட்ரோன்கள் மூலம் ரஷ்யாவின் சைபீரியாவில் உள்ள ஓம்ஸ்க் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை தாக்கியுள்ளது. போர் தொடங்கிய பிறகு அந்தப் பகுதியில் நடந்த முக்கியமான தாக்குதல்களில் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகிறது. தாக்குதலில் எண்ணெய் சுத்திகரிப்பு கோபுரங்களில் தீப்பிடித்து சேதம் ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதை ரஷ்ய அதிகாரிகளும் உறுதிப்படுத்தியுள்ளனர். தினசரி 4.2 லட்சம் பேரல் கச்சா எண்ணெயை சுத்திகரிக்கும் திறன் கொண்ட ஓம்ஸ்க் ஆலை, ரஷ்யாவின் மொத்த சுத்திகரிப்பு திறனில் சுமார் 8 சதவீதம் பங்களிக்கிறது.


இந்த தாக்குதல் ரஷ்யாவின் உள்நாட்டு எரிபொருள் விநியோகம், ஏற்றுமதி வருவாய் மற்றும் ராணுவ எரிபொருள் வழங்கலில் பாதிப்பை ஏற்படுத்தும் என நிபுணர்கள் கருதுகின்றனர். சேதமடைந்த உள்கட்டமைப்பை முழுமையாக சீரமைக்க பல வாரங்கள் அல்லது மாதங்கள் ஆகலாம் என்றும் கூறப்படுகிறது.

ரஷ்யா கடந்த வாரம் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக இந்தநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. இதனால் இரு நாடுகளுக்கிடையேயான மோதல் மேலும் தீவிரமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.



இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மரு.ராஜீவ் , மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலம் பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களுக்கு வெளிப்பொருத்தும் மற்றும் உட்பொருத்தும் இயந்திரங்களை வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சிவகுரு பிரபாகரன் உடனிருந்தார்.

# வெள்ளத்தில் தத்தளிக்கும் மும்பை..!



மும்பை, ஜூலை. 07–

மும்பையில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. கொட்டி தீர்க்கும் கனமழையால் மும்பை நகரே வெள்ளத்தில் தத்தளித்து வருகிறது. பலத்த மழைக்கு குர்லா பகுதியில் மரம் விழுந்து ஒருவர் உயிரிழந்தார். இதேபோல இரவில் மான்கூர்டில் 3 மாடி வீடு இடிந்து விழுந்து 5 சிறுவர்கள் உள்பட 6 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்தநிலையில் நேற்றும் மும்பையில் பலத்த மழைக்கான ‘ஆரஞ்சு’ எச்ச ரிக்கை விடுக்கப்பட்டு இருந்தது. எனவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் இரவு முதலே நகரில் பரவலாக மழை பெய்து வந்தது. இந்தநிலையில் நகருக்கு விடுக்கப்பட்டிருந்த ஆரஞ்சு எச்சரிக்கை நேற்று காலை ‘ரெட் அலர்டாக’ மாற்றப்பட்டது. அதற்கேற்ப நகரில் இடைவிடாமல் மழை கொட்டியது. கடந்த 24 மணிநேரத்தில் மும்பையில் 13 செ.மீ., மழையும், புறநகர்ப்பகுதிகளில் 16 செ.மீ. மழையும் கொட்டித்தீர்த்தது. இதன் காரணமாக தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் தத்தளிக்கிறது.

மும்பையில் அந்தேரி சுரங்கப்பாதையில் வெள்ளம் தேங்கியதால் மூடப் பட்டது. பலத்த மழை காரணமாக நேற்று நகர் முழுவதும் பொதுமக்க ளின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. பலத்த காற்றுடன் மழை பெய் ததால் பல இடங்களில் மரங்கள் சரிந்து விழுந்து சாலை போக்குவரத்து பாதிக்கப்பட்டது.மழை காரணமாக நேற்று மும்பையில் பல தனியார் நிறுவனங்கள் மதியத்துக்கு பிறகு ஊழியர்களுக்கு விடுமுறை அளித்தன. இதேபோல அவசரகால பணிகளில் ஈடுபடாத அரசு ஊழியர்கள், அரசு சார்ந்த பணிகளில் ஈடுபடும் ஊழியர்களுக்கும் ½ நாள் விடுமுறை விடப்பட்டது. மோசமான வானிலை காரணமாக மும்பை விமான நிலையம் தற்காலிக மாக பாதிக்கப்பட்டது. நேற்று பிற்பகல் வரை மும்பை வர வேண்டிய ராய்ப்பூர், சிங்கப்பூர், டெல்லி, கொல்கத்தா மற்றும் மஸ்கட் ஆகிய நகரங்களின் 5 முக்கிய விமானங்கள் ஐதராபாத், டெல்லி மற்றும் பெங்களூரு விமான நிலையங்களுக்கு திருப்பிவிடப்பட்டன.

# தனியார் நிறுவனம் தயாரித்த ‘விக்ரம்-1’ ராக்கெட் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து விண்ணில் ஏவப்படுகிறது!



சென்னை, ஜூலை. 07–

ஐதராபாத்தை சேர்ந்த தனியார் நிறுவனமான ‘ஸ்கைரூட்’ ஏரோஸ்பேஸ், விக்ரம்–1 என்ற ராக்கெட்டை தயாரித்துள்ளது. இது இந்தியாவிலேயே தனியார் நிறுவனம் தயாரித்த முதல் ராக்கெட்டாகும். விண்வெளியில் பூமியின் சுற்றுப்பாதையில் செயற்கைகோள்களை நிலைநிறுத்துவதற்கான இந்த ராக்கெட்டை வருகிற 12–ந்தேதியில் இருந்து ஆகஸ்ட் 4–ந்தேதிக்குள்ளாக, ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து விண்வெளிக்கு ஏவுவதற்கான சோதனைகள் நடக்க இருக்கிறது.

இதுகுறித்து ஸ்கைரூட் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி பவன்குமார் சந்தனா கூறும்போது, “இந்தியாவின் விண்வெளி தொழில், தனியார் நிறுவனங்களுக்கு மிகவும் ஊக்கமளிப்பதாக உள்ளது. விக்ரம்–1 ராக்கெட் 350 கிலோகிராம் வரையிலான சிறிய செயற்கைகோள்களை புவியின் தாழ் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

முழுவதுமாக கார்பன் கலப்பு கட்டமைப்பை கொண்டு உருவாக்கப்பட்டு, ஸ்கைரூட்டால் உருவாக்கப்பட்ட ‘3டி’ அச்சிடப்பட்ட என்ஜின்கள் உள்ளிட்ட திட மற்றும் திரவ உந்துவிசை அமைப்புகளால் இயக்கப்படும் விக்ரம், ஒரு வெற்றிகரமான பயணமாக அமையும். ராக்கெட் பணி களை ஒருங்கிணைத்தல், சோதித்தல் பணிகள் நிறைவடைதல், வானிலை, பாதுகாப்பு, ஏவுதள அனுமதி ஆகியவற்றைப் பொறுத்தே இதன் ஏவுதல் தேதி அறிவிக்கப்படும்’’ என்றார்.

# சீனாவில் கனமழை, வெள்ளம், நிலச்சரிவு: பலி 8



பிஜீங், ஜூலை. 07–

சீனாவில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி 8 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 275 பேர் படுகாயமடைந்துள்ளனர். அதேவேளை, அந்நாட்டின் கன்சு மாகாணத்தில் மலைப்பாங்கான பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 16 பேர் மாயமாகினர். அவர்களை தேடும் பணியில் மீட்புக்குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020